அரசாங்கக் கடனை வசூலிப்பதில் வருவாய்த்துறை
அதிகாரிகள் விவசாயிகளைத் துன்புறுத்துவதும்
கெடுபிடி செய்வதும் குறித்து

மில்லையென்று பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பார்கள். இதுமாதிரி குறிப்பிட்டவற்றைப் பற்றிச் சொன்னால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தக் கடன் எந்த நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராயலாம். அந்த நிபந்தனையின்படி இல்லாமல் அதை மீறிச் செலவு செய்தார்களானால், அந்தப் பணத்தைத் திரும்ப வசூல் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அப்படி நிபந்தனையை மீறிச் செலவு செய்திருந்தாலும், அதையும் அனுதாபத்துடன் பரிசீலிக்கத் தயாராக அரசு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(2) தூத்துக்குடி நகர மன்ற ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஹையர் கிரேடு மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு அரசாணை 1009, கல்வி, 30-6-1974-ஐ அமுல்படுத்தாமல் 1-3-1975 முதல் செலக்ஷன் கிரேடு வழங்குவது குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, “ தூத்துக்குடி நகர்மன்ற ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் செகண்டரிகிரேடு, ஹையர்கிரேடு மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு அரசாணை 1009, கல்வி, 30-6-1974ஐ அமல்படுத்தாமல், 1-3-1975 முதல் செலக்ஷன் கிரேடு வழங்குவதால் சுமார் நூறு ஆசிரியர்களுக்கு மேல், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வுகள் பாதிக்கப்பட்டு, பென்ஷன் தொகைகளிலும், சம்பள ரிவிஷன்களிலும் பாதிக்கப்பட்டு வருகின்ற அவசர நிலையைக் குறித்து ” அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 20-6-1974 நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண் 1009-ல் அனைத்து பள்ளிகளிலுமுள்ள இடைநிலை, தொடக்கநிலை ஆசிரியர்கள், மேலும் மற்ற ஆசிரியர்களுக்கும் பத்து ஆண்டுகள் வேலை பார்த்திருந்தால் தேர்வு நிலை அளிக்க வேண்டுமெனவும் 1-4-1974 முதல் அவ்வாணை பொருந்துமெனவும் உத்தரவிட்டுள்ளனர். ஆகவே தூத்துக்குடி நகராட்சியிலும் தேர்வு நிலையிலான ஆசிரியப் பதவிகள் 1-4-1974 முதலே அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தூத்துக்குடி நகராட்சியின் நியமனக் குழு 22-2-1975 நாளிட்ட தனது தீர்மானம் எண். 9-ல் ஆணையை 1-3-1975 தேதியிலிருந்து அமுல்படுத்த தீர்மானித்தது. ஆகவே தூத்துக்குடி நகராட்சியிலுள்ள ஆசிரியர்கள் இந்தச் சலுகையை

1978 செப்டம்பர் 8] [திரு. கா. காளிமுத்து]

1-3-1975 முதல்தான் பெற்றுள்ளனர். தூத்துக்குடி நகராட்சி ஆணையருக்கு அந்த அரசாணையை 1-4-1974 முதலே அமுல்படுத்தும்படி உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அந்த அறிவுரை வழங்கப்பட்டு எவ்வளவு நாள் ஆகிறது? அந்த அறிவுரை அமுல்படுத்தப் பட்டிருக்கிறது என்பதாகத் தகவல் உண்டா? அரசு அறிவுறுத்திய பிறகும்கூட, அவை அமல் படுத்தப்படவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக் கிறது. ஆகவே அந்த ஆணையில் குறிப்பிட்டுள்ள பலன்களை அந்த ஆசிரியர்கள் அனுபவிக்கிற வகையில் தக்க நடவடிக் கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் ஆசிரியர்களில் சில பேர் செய்து கொண்ட விண்ணப்பத்தை நகராட்சியினுடைய ஆய்வாளர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய அப்பீலை அவர் மறுத் திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மீண்டும் ஆசிரியர் பெரு மக்கள் விண்ணப்பம் செய்த பிறகு, அந்த ஆணையை ஏற்று நகராட்சி மன்றம் 1-4-1974 முதல் வழங்கவேண்டும் என்று, நகராட்சியின் நியமனக் குழு தீர்மானத்தை நிறை வேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை மதிக்க வேண்டும் என்ற முறையில் அறிவுரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையைப் பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தால், விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அரசு வற்புறுத்தும்.

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் உரையின் மீது விவாதம். ஒரு விஷயத்தை அவைக்குச் சொல்ல விரும்பு கிறேன். இன்னும் 12 பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத் திருக்கிறார்கள். இன்றைக்குள் விவாதம் முடியவேண்டும். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, எதிர்த் தரப்பில் உள்ள கட்சியின் உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் பேசு கிறார்கள் என்று நினைக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், மேலும் துணை மானியம் வருகிறது, பொது விவாதம் வருகிறது. ஒரு கட்சியில் உள்ளவர்கள் அதற்கேற்ப பிரித்துக் கொண்டால் சபையை நடத்த முடியும். அவ்வளவு பேரும் பேசுவது முடியுமா என்றால், முடியாது. கட்சித் தலைவருக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் நான் வேற்றுமையைக் காட்ட அவை